காரர்கள்தான் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்களோ என்ற ஐயப்பாடு தமிழ்நாட்டில் அதிகமாகி இருக்கிறது. அதுபற்றி அரசுக்கு ஏதாவது தகவல் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படி யார் யார் இருக்கிறார்கள் என்பதை உறுப்பினர்களைப் போன்றவர்கள் தெரிவிப்பார்களானால் காவல் துறைக்கு அவைகள்கூட உதவியாக இருக்கும்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, இந்தக் கள்ளநோட்டு அடிப்பவர்கள்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளுக்குத் தூக்குத் தண்டனை அளிக்கச் சர்க்கார் வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுது உள்ள சட்டத்தின்படி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

திரு. எம். சுரேந்திரன் : சார், கள்ளநோட்டு தயாரிப்பவர்கள் கள்ளநோட்டுக்கான காகிதங்களை வெளிநாடுகளிலிருந்து கொண்டு வந்துதான் செய்கிறார்கள் என்று சொல்லப்படுகிறதே, அதற்கு உள்நாட்டுக் காகிதங்கள் பயன்படுகின்றனவா? அப்படி வெளிநாடுகளிலிருந்து கொண்டுவருகிறார்கள் என்றால் அதற்கான சாத்தியக்கூறுகள் என்ன, எங்கே இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதில் எல்லாமே கள்ளத்தனமாகத்தான் நடக்கிறது.

யேல் பல்கலைக்கழகத்துக்குக் கொடுக்கப்பட்ட பழமையான ஆவணம்.

*132 வினா—**திரு. டி. மார்டின் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அமெரிக்காவிலுள்ள யேல் பல்கலைக்கழகத்திற்குத் தமிழக அரசினிடம் இருந்து வந்த புராதன Record ஏதேனும் சாலம் சென்ற முதல் அமைச்சர் கொடுத்தார்களா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) அமெரிக்காவில் உள்ள யேல் பல்கலைக் கழகத்தின் 250-வது ஆண்டு விழாவின் தொடர்பாக, "1692-ம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனியின் நாட் குறிப்பேடும் ஆலோசனைக் குறிப்புப் புத்தகமும்" என்ற பழமையான மூல ஆவணம் மாநில ஆவணக் களரியிலிருந்து அந்தப் பல்கலைக் கழகத்திற்குக் கடனாக அளிக்கப் பட்டது.

THIRU T. MARTIN : Persons who are engaged in research work in this State may like to refer to ancient documents like this. Therefore, may I request the Hon. Chief Minister to state

whether this document was sent to Yale University without any substitute copies of this record being kept here, in our State?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, இதைப் பற்றிக் கொஞ்சம் விவரமாகச் சொல்ல விரும்புகிறேன். 'எலிஹூ யேல்' என்பவர் சென்னையிலே 1687 முதல் 1692 வரை ஆளுநராகப் பணியாற்றி வந்தார். கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைவராகவும் இருந்து வந்தார். இந்தப் பதவிகள்மூலம் கிடைத்த ஊதியத்தின் மூலம் 1718-ல் அவதியுற்ற New England College -க்கு உதவியளித்தார். இவர் பெயரால் உள்ள யேல் கல்லூரியின் 250-வது ஆண்டு விழாவில் இவரது வாழ்க்கைக் குறிப்பை வைக்கவேண்டுமென்று விரும்பினார்கள். அதற்காக இதைக் கடனாகக் கேட்டு எழுதினார்கள். மறைந்த அறிஞர் அண்ணா அவர்கள் யேல் பல்கலைக் கழகத்திற்குச் சென்றிருந்த நேரத்தில் இந்தக் கோரிக்கை நேரிடையேயும் விடுக்கப்பட்டது. அந்த அடிப்படையில் இங்கிருந்து அளிக்கப்பட்டது. அது அனுப்பப்படும் நேரத்திலே ஒருவேளை அது காணாமல் போய்விட்டால் என்ன செய்வது என்பதற்காகப் புகைப்படம் எடுக்கப்பட்டது. 17-6-1968-இல் அனுப்பப்பட்டது. அந்தப் புத்தகம் 14-3-1969-இல் நமக்குத் திரும்பக் கிடைத்து விட்டது.

எழும்பூர் கண்நோய் மருத்துவ மனை—நோயாளிகளுக்கு உணவு விநியோகம்.

***133 வினா—திரு. எம். பூபதி :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை எழும்பூர் கண் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் நோயாளிகள் மார்ச் 1968-ல் வழக்கம்போல் உணவு கிடைக்காமல் ஒரு தினம் கஷ்டப்பட்டார்களா?

(இ) ஆம் எனில், அதற்குக் காரணம் என்ன?

(உ) இந்த நெருக்கடி எவ்வாறு சமாளிக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) & (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. எம். பூபதி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அந்த விஷயத்தை, நான் கிளப்பியுள்ள விஷயத்தை மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால், அந்த விஷயம் அங்கு நடந்திருக்கிறது என்பது ஆதாரப் பூர்வமாகத் தெரிந்த காரணத்தால்தான் அந்தக் கேள்வி போடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 1968-ம் வருடம் மார்ச் 26-ம் தேதி அங்கு சமையல்நிலை ஊழியர்களின் ஒருவேளை வேலைநிறுத்தம் நடந்தது உண்மை. ஆனால்